**IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.**

**S.C.No.138/2013**

Date: 28.02.2024.

**PW–8: செல்வம்**

சாட்சி இன்று மீண்டும் மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு எதிரிகள் 1, 2, 5, 7, 9, 11, 14 முதல் 18 தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

**A1 to A3, A5, A6, A7, A9, A13 to A17 present. A8, A11 & A18 called absent. Petition u.sec.317 Cr.P.C filed and allowed.**

**1, 2, 5, 7, 9, 11, 14 முதல் 18 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார் என்னை விசாரித்தபோது எதிரிகள் எனது உறவினர்கள் என்ற சங்கதியை நான் சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லியிருப்பேன். எதிரிகள் எனது உறவினர்கள் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. எங்கள் ஊரிலுள்ள வண்ணாங்குளத்திலிருந்து கிழக்கு புறமாக பாப்பாகுடி கிராமத்திற்கு செல்லும் பாதையில் ஒரு கிலோமீட்டர் தொலைவில் பரமசிவம், அம்மாகுட்டி ஆகியோர்களுக்கு சொந்தமான ரைஸ் மில் இருக்கிறது என்றால் சரிதான்.

எங்கள் ஊரில் காளியம்மன் கோவிலுக்கு தெற்கு புறத்தில் 1 கி.மீ தொலைவில் வாரிஓடை உள்ளது என்றால் சரிதான். அந்த வாரி ஓடையின் தென்கரையில் அ.சா.9 பழனிவேல் என்பவருக்கு சொந்தமான விவசாயநிலம் இருக்கிறது என்றால் சரிதான். அந்த நிலத்தின் விஸ்தீரணம் சுமார் 10 ஏக்கர் என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை.

எனது வீட்டருகே நான் சென்று பார்த்தபோது காசிநாதன், அவரது மனைவி ஜானகி, மகன் தர்மலிங்கம் ஆகியோர் வெட்டுபட்டு கிடந்தார்கள் என்றும், ஜானகி மட்டும் உயிர்பிழைத்துவிட்டார் என்றும், மற்ற இருவரும் இறந்துவிட்டார்கள் என்றும், தர்மலிங்கத்தின் உடலில் தலை இல்லை என்றும், அவரது தலையை எடுத்துக்கொண்டுபோய் அருகிலிருந்த காளியம்மன் கோவில் சூலத்தில் குத்தி வைத்திருந்தார்கள் என்றும் நான் முதல்விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகளை போலிசார் விசாரணையிலும் சொல்லியிருக்கிறேன். அந்த கொலைகள் நடந்ததை

நான் பார்க்கவில்லை என்று சாட்சி சுயமாக கூறுகிறார். சம்பவத்தின் போது எதிரிகள் தினேஷ் மற்றும் ராஜதுரை ஆகிய இருவரை மட்டும் தான் நான் பார்த்ததாக சொல்லியிருக்கிறேன் என்றாலும், மற்ற எதிரிகளை நான் பார்த்ததாக சொல்லவில்லை என்றாலும், என் கண்முன்பாக மேற்படி இரண்டு எதிரிகள் கொலை செய்ததை நான் நேரில் பார்த்தேன். மற்ற இடங்களில் நடந்த சம்பவங்களை நான் எப்படி பார்த்திருக்க முடியும் என்று சாட்சி கூறுகிறார்.

சம்பவம் 2008 ஆம் வருடம் நடந்தது. வருடத்தை நான் கையில் எழுதிவைத்திருக்கிறேன் என்றால் சரியல்ல. ( சாட்சி கைகள் இரண்டையும் கட்டிய நிலையில் சாட்சியம் அளிக்கிறார். அவர் உள்ளங்கையை பார்க்கவில்லை). நான் கையில் எழுதிவைத்திருப்பதை பார்த்துவிட்டு வந்துதான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தேதி எனக்கு நினைவில் இருக்கிறது. எனது இடது உள்ளங்கையில் ராஜதுரை, தினேஷ் என்று எழுதிவைத்திருக்கிறேன் என்றால் சரிதான். ( சாட்சி இடது உள்ளங்கையில் மேற்படி இரண்டு பெயர்களை எழுதிவைத்திருக்கிறார்.).

சம்பவத்தினத்தன்று எதிரிகள் ராஜதுரை மற்றும் தினேஷ் ஆகியோர் சம்பவ இடத்திலேயே இல்லை என்றாலும், அவர்களது பெயர்களை போலிசர் சொல்லிகொடுத்து கையில் எழுதிவைத்து பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

சம்பவதினத்தன்று நான் ஊரில் இல்லை என்றாலும், அன்றைய தினம் நான் காலையிலேயே நான் விவசாய வேலைக்கு போய்விட்டு இரவு 8.00 மணிக்கு தான் ஊருக்கு திரும்பினேன் என்றாலும், நான் சம்பவம் எதனையும் பார்க்கவில்லை என்றாலும், அதனால் தான் எதிரிகள் இருவரது பெயரை கையில் எழுதிவைத்துக்கொண்டு சாட்சியம் அளிக்ககூடிய சூழ்நிலைக்கு நான் தள்ளப்பட்டுள்ளேன் என்றாலும் சரியல்ல.

நான் முதல்விசாரணையில் சொன்னதுபோல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், போலிசார் சொல்லிகொடுத்து பொய் சாட்சி சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல. மகாலிங்கம் கொலை செய்யப்பட்டதை நான்

நேரில் பார்த்தேன் என்று சாட்சி சுயமாக கூறுகிறார். நான் சிறார்நீதிக்குழுமத்தில் இந்த வழக்கு சம்மந்தமாக சாட்சியம் அளித்திருக்கிறேன் என்றால் அதுபற்றி எனக்கு நினைவில்லை.

அந்த நீதிமன்றத்தில் நான் சாட்சியம் அளித்திருக்கிறேன் என்றாலும், நினைவில்லை என்று பொய்யாக சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல. என்னிடம் காட்டடப்படும் சாட்சிய வாக்குமூலத்திலுள்ள செல்வம் என்ற கையொப்பம் என்னுடையது தான். அந்த சாட்சிய வாக்குமூலத்தில் நான் 16.05.2008 அன்று காலை சுமார் 10.00 மணியளவில் நான் என் வீட்டிலிருந்தபோது மளிகை கடை அருகில் சத்தம்கேட்டு அங்கு வந்தேன் என்று சாட்சியம் அளித்திருக்கிறேன் என்றால் அதுபற்றி எனக்கு நினைவில்லை.

நான் இந்த வழக்கில் எனது முதல்விசாரணையில் 16.05.2008 அன்று காலை சுமார் 10.00 மணியளவில் நான் தண்ணீர் பிடிப்பதற்காக தேவகுமாரி வீட்டிற்கு வெளியே அமைக்கப்பட்டுள்ள பொதுகுழாய்க்கு சென்றதாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். காசிநாதனுக்கு சொந்தமான எங்கள் கிராமத்தில் 15 ஏக்கர் விவசாய நிலம் இருந்தது என்றால் சரிதான். அந்த விவசாய நிலமானது எங்கள் ஊர் காளியம்மன் கோவிலுக்கு தெற்குபுறம் சுமார் 100 அடி தொலைவில் அமைந்துள்ளது என்றால் சரிதான்.

அந்த நிலத்தில் காசிநாதன் ஆழ்துளை கிணறு அமைத்து அதனை பயன்படுத்தி விவசாயம் செய்து வந்தார் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**

Sd/- G. Sri Rama Jeyam,
III Additional District Judge,
Salem.